## தலைவர்களை உருவாக்கும் தலைவர்கள்




கர்த்தராகிய தேவன் தம்முடைய சித்தத்தை, திட்டத்தை பூமியில் நிறைவேற்ற பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு மனிதர்களை தலைவர்களாக ஏற்படுத்தினார். உதாரணமாக, மோசே என்ற மனிதனை அழைத்து அவனை தலைவனாக்கி அவனின் மூலமாக ஒரு பெரும் திரளான மக்கள் கூட்டத்தையே வழி நடத்தினார். தலைவர்களில் சிலர் ஆசாரியர்களாய் மற்றும் சிலர் நியாயாதிபதிகளாய், இராஜாக்களாய், தீர்க்கதரிசிகளாய் என்று பல்வேறு விதங்களில் இருந்தனர். தேவன் ஒருவரை தலைவராக ஏற்படுத்துவதற்கு முன்பாக, அவர்களுடைய வாழ்க்கையின் பல்வேறு காலகட்டங்களில், அவர்களை பலவித மேடுபள்ளமான, கரடுமுரடான பாதைகளில் நடத்தி, அவர்களை தலைவர்களாக உருவாக்குகிறார். யாரும் ஒரே நாளில் தலைவராக ஏற்படுத்தபடுவதில்லை. அதற்காக திரைமறைவில் பல்வேறு காரியங்களை தேவன் அவர்களது வாழ்க்கையில் செய்கிறார்.

இப்படியாக உருவாக்கப்பட்ட தலைவர்கள் தேவனுடைய பணி தொடர்ந்து நடைபெற தங்களுக்கு அடுத்ததாக, இரண்டாம் தலைமுறை தலைவர்களை தேவ சித்தத்தின்படி, திட்டத்தின்படி, நடத்துதலின்படி உருவாக்க வேண்டும். ஆனால் சிறந்த தலைவர்களாக விளங்கிய சிலர், இரண்டாம் தலைமுறை தலைவர்களை உருவாக்காமல் கடந்து சென்றனர். இதனால் பல்வேறு விதங்களில் தேவனுடைய திட்டத்திற்கு, சித்தத்திற்கு எதிரான காரியங்கள் நடைபெறுவதற்கு அவர்களே ஒரு காரணமாயினர்.

சிலர் தனக்கு அடுத்ததாக தலைவர்களை உருவாக்கியும், தேவ சித்தத்தை அறியாமலும், தேவ சித்தத்திற்கு எதிராகவும் அதை செய்தனர்.

**1 சாமுவேல் 2,3 ஆம்** அதிகாரங்களில் ஆசாரியனாகிய ஏலியின் குமாரர் துன்மார்க்கராய் இருந்தபடியால் தேவன் அவர்களை அழித்து, ஏலியின் குடும்பத்தை தள்ளி அதற்கு பதிலாக சாமுவேலை ஏற்படுத்தினார். ஏலியின் குமாரர் துன்மார்க்கராய் இருந்தும் ஏலி அவர்களை அடக்காமற்போன பாவத்தினிமித்தம் அவர்கள் தேவ நியாயத்தீர்பை சம்பாதித்தனர் (1 **சாமு** 3:13). இதை சாமுவேலும் நன்றாக அறிந்திருந்தார் (1 **சாமு** 3:11-14). ஏலி அடுத்தக்கட்ட தலைவர்களாக தன் குமாரரை சரியாக உருவாக்காததின் விளைவை சாமுவேல் கண்ட பின்பும், 1 **சாமு** 8:1-3 **கூறுகிறது "சாமுவேல் முதிர்வயதானபோது, தன் குமாரரை இஸ்ரவேலின்மேல் நியாயாதிபதிகளாக வைத்தான். அவனுடைய மூத்தகுமாரனுக்குப் பெயர் யோவேல், இளையவனுக்குப் பெயர் அபியா; அவர்கள் பெயெர்செபாவிலே நியாயாதிபதிகளாயிருந்தார்கள். ஆனாலும் அவனுடைய குமாரர் அவன் வழிகளில் நடவாமல், பொருளாசைக்குச் சாய்ந்து, பரிதானம் வாங்கி, நியாயத்தைப் புரட்டினார்கள்."**, என்று.

இங்கு சாமுவேலும் அந்த பிழையையே மறுபடியும் செய்கிறார். ஏலியும், சாமுவேலும் சிறந்த தேவமனிதர்களாய், தலைவர்களாய் இருந்தபொழுதும், அவர்கள் சிறந்த தலைவர்களை உருவாக்காமல் போயினர். அதன் விளைவு அடுத்த வசனத்திலேயே தெரிகிறது. 1 **சாமு** 8:4-7 **"அப்பொழுது இஸ்ரவேலின் மூப்பர் எல்லாரும் கூட்டங்கூடி, ராமாவிலிருந்த சாமுவேலினிடத்தில் வந்து: இதோ, நீர் முதிர்வயதுள்ளவரானீர்; உம்முடைய குமாரர் உம்முடைய வழிகளில் நடக்கிறதில்லை; ஆகையால் சகல ஜாதிகளுக்குள்ளும் இருக்கிறபடி, எங்களை நியாயம் விசாரிக்கிறதற்கு, ஒரு ராஜாவை ஏற்படுத்தவேண்டும் என்றார்கள். எங்களை நியாயம் விசாரிக்க ஒரு ராஜாவை ஏற்படுத்தும் என்று அவர்கள் சொன்ன வார்த்தை சாமுவேலுக்குத் தகாததாய்க் காணப்பட்டது; ஆகையால் சாமுவேல் கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணினான். அப்பொழுது கர்த்தர் சாமுவேலை நோக்கி: ஜனங்கள் உன்னிடத்தில் சொல்வதெல்லாவற்றிலும் அவர்கள் சொல்லைக் கேள்; அவர்கள் உன்னைத் தள்ளவில்லை, நான் அவர்களை ஆளாதபடிக்கு, என்னைத்தான் தள்ளினார்கள்."**

ஒருபுறம் தேவன் சாமுவேலை கடிந்துகொள்ளாத போதும், அவர்கள் என்னைத்தான் தள்ளினார்கள் என்று தேவன் கூறினாலும், ஜனங்கள்

இப்படியாக முறையிட அவர் தன் குமாரர்களை சரியான தலைவர்களாய் உருவாக்காமற் போனதும் ஒரு காரணமாகும். இதன் விளைவு சாமுவேலின் சந்ததி பற்றி நாம் அதன் பிறகு வேதத்தில் எங்கும் காணமுடியவில்லை. ஆனால் அதன் பிறகு தேவனே யார் யாரை தலைவர்களாய் காட்டினாரோ (சவுல், தாவீது), அவர்களை அபிஷேகித்து தலைவர்கள் ஆக்கினார். இங்கு நாம் கற்று கொள்ளும் பாடம் தலைவர்களை உருவாக்காமற் போவதும், உருவாக்கினாலும் அவர்களை சரியான விதத்தில் உருவாக்காமற் போனாலும் அது ஒரு தலைவனுடைய ஊழிய பாதையில் ஒரு சருக்கலாகவே காணப்படுகிறது.

அதே சாமுவேல் புஸ்தகத்தில், சாமுவேலுக்கு அடுத்ததாக, தலைமை பொறுப்பை இராஜாவாக ஏற்ற சவுலின் வாழ்க்கையிலும் இக்குறை வேறுவிதத்தில் வெளிப்பட்டது. சாமுவேல் சவுலை தேவ திட்டத்தின்படி தலைமை பொறுப்பேற்க்க அழைத்த பொழுது, தான் எவ்வளவு சிறியவன், தன் குடும்பம் எவ்வளவு சிறியது என்று கூறி **(1 சாமு 9:21)** தன்னை தாழ்த்தின சவுல், அதே தலைமை பதவியை, இராஜாவாய் அனுபவித்த சில வருடங்களிலேயே, தனக்கு அடுத்ததாக ஆண்டவர், தாவீதை தலைவனாக, இராஜாவாக தெரிந்துகொண்டார் என்பதை அறிந்ததும், தன் தலைமை பொறுப்பை தேவ சித்தத்தின்படி ஒப்படைக்க மனதில்லாமல், தன் குடும்பத்தை சேர்ந்த தன் வாரிசான யோனத்தான் தான் இராஜாவாக வர வேண்டும் என்று விரும்பினான். அதற்காக தாவீதை கொல்ல நினைத்தான் **(1 சாமு 20:30,31)**.

இங்கு தேவசித்தத்தின்படி சவுல் தலைவனாக ஏற்படுத்தபட்ட பொழுதும், அடுத்த தலைமுறை தலைமையை தேவன் சவுலுக்கு காண்பித்த பொழுதும், அதை ஏற்க மனதில்லாமல் அதற்கு எதிராய் செயல்பட்டது, தேவ திட்டத்திற்கு ஒரு தடைகல்லாய் காணப்பட்டது. அதன் முடிவு சவுலும், யோனத்தானும் ஒரே நாளில் மடிந்தனர். இங்கு நாம் அறிந்து கொள்ளும் சத்தியம், தேவன் ஒருவரை தலைமை பொறுப்பிற்கு ஏற்படுத்தும் பொழுது, அதை ஏற்றுக்கொள்ளும் நபர், தன் காலத்தில் தன்னுடைய பணியை செவ்வையாய் செய்வதுமட்டுமில்லாமல், தனக்கு பிறகும் அந்த ஊழியம் தேவ சித்தத்தின்படி, சரியான ஒரு தலைமையின் கீழ் தொடர வேண்டும் என்ற தரிசனத்தையும் உடையவராய் இருக்க வேண்டும்.

இதில் சரியாக செயல்பட்ட சிலர், மோசே, தாவீது, எலியா போன்றவர்கள். இவர்கள் யாவரும் தேவசித்தத்தின்படி தேவன் யாரை தெரிந்துகொண்டாரோ அவர்களை தலைவர்களாக ஏற்படுத்தினர். இதனால் மோசேக்கு பின்பாக யோசுவாவின் மூலமாகவும், தாவீதிற்கு

பின்பாக சாலமோனின் மூலமாகவும், எலியாவிற்கு பின்பாக எலிசாவின் மூலமாகவும் தேவபணி தடையின்றி நடைபெற்றது. புதிய ஏற்பாட்டின் காலத்திலும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும், தனக்கு அடுத்ததாக இப்பூவுலகில் தம் பணியை தொடர்ந்து செய்ய அப்போஸ்தலர்களை ஏற்படுத்தினார், அப்போஸ்தலர்களும் தங்களுக்கு பிறகு அடுத்தகட்ட தலைவர்களை உருவாக்கினர். அதனால் தான் இன்று வரை சுவிஷேசம் எந்தவித தடையுமின்றி உலகம் முழுவதும் அறிவிக்கப்பட்டு கொண்டேயிருக்கிறது.

எனவே இக்காலத்திலும் தேவதிட்டத்தின்படி தலைமை பொறுப்பேற்று ஊழியத்தை செய்யும் யாரானாலும், செய்யும் ஊழியம் எப்படிப்பட்டதாயிருந்தாலும் தனக்கு அடுத்த்தாக தலைமை பொறுப்பேற்று நடத்த, தேவன் யாரை காண்பிக்கிறார் என்பதை அறிந்து அவர்களை பழகுவித்து, அவர்களை சரியான தலைவர்களாய் உருவாக்குவது ஒவ்வொரு தலைவனின் கடமையாகும்.

ஆனால் இன்று, தேவ ஊழியத்தை செய்யும் பலர் இதைப்பற்றி ஒரு கரிசனை இல்லாமல் இருக்கின்றனர். சிலர் சவுலை போல தங்கள் இரத்த சம்பந்தமான வாரிசுகள் அல்லது தங்களுக்கு சரியென தோன்றுபவர்கள் தான் அடுத்த தலைவர்களாக வரவேண்டும் என்று நினைத்து தலைமை பொறுப்பிற்கு தகுதியானவர்களுக்கு விரோதமான காரியங்களை செய்கின்றனர். இதனால் இன்று எத்தனையோ தேவ சபைகளில், ஊழியங்களில் பிரிவினை காணப்படுகிறது. பல ஆண்டுகளாய், அருமையாய் கட்டி எழுப்பபட்ட ஊழியங்கள் ஒரு நிமிடத்தில் ஒன்றுமில்லாமல் போகிறது. தேவனுடைய நாமத்திற்கு புகழ்ச்சிக்கு பதிலாக இகழ்ச்சி இப்படிப்பட்ட தலைவர்கள் மூலம் ஏற்படுகிறது.

நம் தமிழ்நாட்டிலும், அரசியல் ரீதியாய் தலைமை பொறுப்பேற்க, இரண்டாம் தலைமுறை தலைவர்கள் சரியாய் அடையாளம் காட்டபடாமல் போனதால், சமுதாயத்திலும், அரசியலிலும் ஏற்பட்டிருக்க கூடிய பல்வேறு சிக்கல்களை நாம் கண்கூடாக காண்கிறோம். எனவே சமுதாயமானாலும், சபையானாலும் சரியான தலைவர்கள் உருவாக்கப்படுவது மிக மிக அவசியமாகும். இல்லையேல் அது பல்வேறு குழப்பங்களுக்கு வழிவகுத்து, பல்வேறு நன்மைகளை நாம் அனுபவிக்க முடியாதபடி தடைகற்களாய் காணப்படும். தேவன் தாமே சரியான தலைவர்களை ஒவ்வொரு காலகட்டத்திலும் நமக்கு உருவாக்கி தருவாராக. ஆமென், அல்லேலூயா.